ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



ப்ரபந்நஜநகூடஸ்தாம்சரான ஸ்ரீ நம்பிள்ளை

ஸ்ரீ நம்பிள்ளை திருவடிகளாகிய வள்ளல் வடக்குத்
திருவீதிப் பிள்ளை திருக்குமாரரானவரும்
தேவப் பெருமான் அபராவதாரருமான
பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

# அர்த்த பஞ்சகம்

விலை ரூபாய் ஒன்று

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



பிள்ளைலோகாசார்யர் மணவாள மாமுநிகள்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## முகவுரை

ஸ்ரீவைணவராய்ப் பிறந்தோர் அனைவரும் முக்கியமாகக் கொள்ள வேண்டுவது அர்த்த பஞ்சக ஜ்ஞாநம் — அதாவது ஜீவாத்ம ஸ்வரூபம் பரமாத்ம ஸ்வரூபம், புருஷார்த்த ஸ்வரூபம், உபாய ஸ்வரூபம், விரோதி ஸ்வரூபம் ஆகிய இவை ஐந்தும். இவற்றை 'அறியக் கற்றுவல்லார் வைட்டணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே' யாவர்.

இந்த ஐந்து அர்த்தங்களையும் வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை திருக்குமாரராய் ஸகல சாஸ்த்ர நிபுணராய் விளங்கிய

பிள்ளை லோகாசார்யர்

ஸகல சேதநோஜ்ஜீவனார்த்தமாகத் திருவாய்மலர்ந்தருளினர்.

அதுவே அர்த்த பஞ்சகம் என்னும் நூல். இதனை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அநுபவத்திற்கும் அநுஸந்தானத்திற்கும் உகப்பாகவிருக்க வேண்டியும், உஜ்ஜீவனத்துக்கும் ஹேதுவாயிருக்குமென்றும் அச்சிட்டு வெளியிட முற்பட்டேன்.

இந்த அரிய நூலை ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீயதிராஜ ஜீயர் மடம் மடாதிபதி ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ராகவ யதீந்த்ர ப்ரவண யதிராஜ ஜீயர் ஸ்வாமி அவர்கள் கடாக்ஷித்து ஆசியுரையும் வழங்கியுள்ளார்.

இந்நூலையறிந்து நன்கு அநுஷ்டிக்க ஒவ்வொருவரும் அவசியம் தம் ஆசார்யரிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றிருத்தல் வேண்டும்; மேலும் ஆசார்யரிடமிருந்தே அர்த்த பஞ்சக ஜ்ஞானம் பெறுவது சிறப்புடைத்து.

தாஸன்

தி. கோ. இராமாநுஜதாஸன்,

ஸ்ரீ நம்பிள்ளை சபைத் தலைவர்,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபெரும்பூதூர்

ஸ்ரீயதிராஜஜீயர் மடம் மடாதிபதி ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ராகவ யதீந்த்ர ப்ரவண யதிராஜஜீயர் ஸ்வாமி அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

ஸ்ரீமான் T. K. இராமாநுஜதாஸர் அவர்களுக்கு

அநேக மங்களாஸாசனம்.

அர்த்த பஞ்சகம் என்ற இந்நூல் நன்கு பார்வை செய்யப்பட்டது. இது முன் பெரியோர்களால் சம்ஸ்கிருதத்தில் வெளியிடப்பட்டுக் கரும்பு போலிருந்தது. பின் ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் மணிப்பிரவாளத்தில் இக்கரும்பினைச் சாறு பிழிந்து வெல்லக் கட்டி போல் ஆக்கி அருளிச்செய்தார். அதை மறுபடியும் ஸ்புடம் செய்து எவருக்கும் புரியும் வண்ணம் கற்கண்டு போல் மிகவும் எளிய அமைப்பில் இவரால் இந்த நூல் தொணரப்பட்டிருக்கிறது. இது மிகவும் உலகிற்கே பெரும் அன்னதானமாக விளங்கட்டும்.

ராகவ யதீந்த்ர ப்ரவண யதிராஜ ஜீயர், 25-4-80

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# தேவப்பெருமாள் அபராவதாரரும்

ப்ரபந்த ஜநகூடஸ்தாம்சரான நம்பிள்ளை திருவடிகளாகிய
வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை திருக்குமாரராய்,
ப்ரணதார்த்தி ஹராம்சஜராய். ஸகலசாஸ்த்ர நிபுணராய்,
ஸகலசேதநோஜ்ஜீவந காமரான பிள்ளைலோகாசார்யர்

திருவாய்மலர்ந்தருளிய

## அர்த்த பஞ்சகம்

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே
ஸம்ஸார போகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:

வாழியுலகாசிரியன் வாழியவன் மன்னுகுலம்
வாழிமுடும்பை யென்னும் மாநகரம் — வாழி
மனஞ்சூழ்ந்த பேரின்ப மல்குமிகுநல்லார்
இனஞ்சூழ்ந்திருக்கு மிருப்பு.

ஸம்ஸாரியான சேதநனுக்குத் தத்வ ஜ்ஞாநம் பிறந்து
உஜ்ஜீவிக்கும்போது அர்த்த பஞ்சகஜ்ஞாநம் உண்டாக வேணும்
'மற்றெல்லாம் பேசிலும்' என்கிறபடியே
அறிய வேண்டிய அர்த்தமெல்லாம் இதுக்குள்ளேயுண்டு

அதாவது அஞ்சர்த்தம்

அர்த்த பஞ்சக ஜ்ஞாநமாவது

| | | |
|---|---|---|
| I. | ஸ்வ ஸ்வரூபம்<br>ஆத்ம ஸ்வரூபம் | நித்யர், முக்தர், பத்தர், கேவலர், முமுக்ஷுக்கள். |
| II. | பர ஸ்வரூபம்<br>ஈச்வர ஸ்வரூபம் | பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் |
| III. | புருஷார்த்த ஸ்வரூபம்<br>புருஷனால் அர்த்திக்கப்படுமது | தர்மம், அர்த்தம், காமம், ஆத்மாநுபவம், பகவதநுபவம் |
| IV. | உபாய ஸ்வரூபம் | கர்மம், ஜ்ஞாநம், பக்தி, ப்ரபத்தி, ஆசார்யாபிமாநம் |
| V. | விரோதி ஸ்வரூபம் | ஸ்வரூப விரோதி, பரத்வ விரோதி, புருஷார்த்த விரோதி, உபாயவிரோதி, ப்ராப்திவிரோதி. |

இவற்றில் ஒவ்வொரு விஷயந்தான்
ஐந்து படிப்பட்டிருப்பது காண்க.

# I. ஸ்வ ஸ்வரூபம் - ஆத்ம ஸ்வரூபம்

## 1. நித்யராவார் :

ஒரு நாளும் ஸம்ஸார ஸம்பந்தமாகிற அவத்யமின்றிக்கே நிரவத்யராய், பகவதநுபவாநுகூல்யைக போகராய், ''வானிளவரசு வைகுந்தக் குட்டன் வாசுதேவன்'' என்கிற ஸ்ரீவைகுண்டநாதனுக்கு 'விண்ணாட்டவர் மூதுவர்' என்கிறபடியே பட்டங் கட்டுகைக்கு உரியராம்படி மூப்பரான மந்திரிகளாய், ஈசுவர நியோகாத் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைப் பண்ணவும் சக்தராய், பர வ்யூஹாதி ஸர்வாவஸ்தைகளிலும் தொடர்ந்து அடிமை செய்யக் கடவராய் கோயில்கொள் தெய்வங்களான ஸேனைமுதலியார் தொடக்கமான அமரர்கள்.

## 2. முக்தராவார் :

பகவத் ப்ரஸாதத்தாலே ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் வந்த க்லேச மலங்களெல்லாம் கழிந்து, பகவத் ஸ்வரூபரூபகுண விபவங்களை அநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீதி உள்ளடங்காமையாலே வாயாரப் புகழ்ந்து, 'மீட்சியின்றி வைகுந்த மாநகரத்திலே' களித்து ஆநந்திக்கிற முநிவர்கள்.

## 3. பத்தராவார் :

பாஞ்ச பௌதிகமாய், அநித்யமாய், ஸுக துக்காநுபவ பரிகரமாய், ஆத்ம விச்லேஷத்தில் தர்சந ஸ்பர்சந யோக்யமில்லாதபடி அசுத்தாஸ்பதமாய், அஜ்ஞாந, அந்யதாஜ்ஞாந, விபரீதஜ்ஞாந ஜநகமான ஸ்வதேஹமே ஆத்மாவாகவும், சப்தாதி விஷயாநுபவ ஜநிதமான ஸ்வதேஹ போஷணமே புருஷார்த்தமாகவும், சப்தாதி விஷயாநுபவத்துக்கு உறுப்பாக வர்ணாச்ரம தர்மங்களை அழியமாறியும், அஸேவ்ய ஸேவை பண்ணியும், பூத ஹிம்ஸை பண்ணியும், பரதார - பரத்ரவ்யாபஹாரம் பண்ணியும், ஸம்ஸார வர்த்தகராய் பகவத் விமுகரான சேதநர்.

## 4. கேவலனாவான் :

தனியிடத்திலே மிகவும் க்ஷுத் பிபாஸைகளாலே நலிவு பட்டவன் பக்ஷ்யாபக்ஷ்ய விவேகம் பண்ணமாட்டாதே தன்னுடம்பைத் தானே ஜீவித்து ப்ரஸந்நனாமா போலே ஸம்ஸார தாவாக்நியாலே தப்தனானவன், ஸம்ஸார துக்க நிவ்ருத்திக்கு உறுப்பாக சாஸ்த்ர ஜந்ய ஜ்ஞாநத்தாலே ப்ரக்ருத்யாத்ம விவேகம் பண்ணி, ப்ரக்ருதி - துக்காச்ரயமாய், ஹேய பதார்த்த ஸமுதாயமாய் இருக்கிற ஆகாரத்தையும், ஆத்மா - ப்ரக்ருதே: பரனாய் பஞ்ச விம்சகனாய், ஸ்வயம்ப்ரகாசனாய், ஸ்வதஸ் ஸுகியாய், நித்யனாய், அப்ராக்ருதனாய் இருக்கிற ஆகாரத்தையும் அநுஸந்தித்து, முன்பு தான்பட்ட துக்கத்தின் கநத்தாலே இவ்வல்ப ரஸத்திலே கால் தாழ்ந்து, 'உணர் முழு நலமான பரமாத்ம விவேகம் பண்ண மாட்டாதே 'அமுத வெள்ளத்தானாம் சிறப்புவிட்டு' அவ்வாத்ம ப்ராப்திக்கு ஸாதநமான ஜ்ஞாந யோகத்திலே நிஷ்டனாய், யோகபலமான ஆத்மாநுபவ மாத்ரத்தையே புருஷார்த்தமாக அநுபவித்து, பின்பு ஸம்ஸார ஸம்பந்தமும், பகவத் ப்ராப்தியும் அற்று, யாவதாத்மபாவி அசரீரியாய்க் கொண்டு திரிவானொருவன்.

5. முமுக்ஷுக்கள் :

மோக்ஷத்திலே இச்சையுடையவர்களுக்கு முமுக்ஷுக்களென்று பேராகக்கடவது.

(இதுதான் — முமுக்ஷுக்களாய் உபாஸகராயிருப்பாரும்
முமுக்ஷுக்களாய் ப்ரபந்நராயிருப்பாருமாக இரண்டு
படிப்பட்டிருக்கும்)

## II. பரஸ்வரூபம்—ஈஸ்வர ஸ்வரூபம்

1. பரத்வமாவது :

பரமபதத்திலே 'அவாக்யநாதர :' என்று எழுந்தருளியிருக்கிற 'ஆதியஞ்சோதியுருவான' பரவாஸுதேவர்.

2. வ்யூஹமாவது :

ஸ்ருஷ்டி ஸ்திதிஸம்ஹார கர்த்தாக்களான ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்கள்.

3. விபவமாவது :

ராம க்ருஷ்ணாத்யவதாரங்கள்.

4. அந்தர்யாமித்வமாவது :

இது இரண்டுபடிப்பட்டிருக்கும் : அதாவது

1. 'அடியேனுள்ளான்' என்றும், 'எனதாவி' என்றும், 'என்னுயிர்' என்றும் சொல்லுகிறபடியே ஆத்மாவுக்குள்ளும்,

2. 'போதிற்கமலவன்னெஞ்சம் புகுந்து' என்றும்,
'அரவிந்தப் பாவையுந்தானுமகம்படிவந்து புகுந்து' என்றும்
'புந்தியிற் புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்த வழகன்' என்றும்,
'உள்ளுவாருள்ளிற்றெல்லா முடனிருந்தறிதி' என்றும்,

சொல்லுகிறபடியே லக்ஷ்மீஸஹிதனாய், விலக்ஷண விக்ரஹ யுக்தனாய்க்கொண்டு ஹ்ருதய கமலத்துக்குள்ளும்

ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் ஸதாவலோகநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கும் இருப்பு.

5. அர்ச்சாவதாரமாவது !

"தமருகந்த தெவ்வுருவமவ் வுருவந்தானே, தமருகந்த தெப்பேர் மற்றப் பேர்" என்கிறபடியே தனக்கென்ன ஒருருவும், ஓர்பெயரும் இன்றிக்கே ஆச்ரிதருகந்த வடிவே வடிவாகவும், அவர்களிட்ட பெயரே பெயராகவும்,

ஸர்வஜ்ஞனாயிருக்கச்செய்தே அஜ்ஞனைப் போலேயும், ஸர்வ சக்தனாயிருக்கச்செய்தே அசக்தனைப் போலேயும், அவாப்த ஸமஸ்த காமனாயிருக்கச்செய்தே ஸாபேக்ஷனைப் போலேயும், ரக்ஷகனாயிருக்கச் செய்தே ரக்ஷ்யம் போலேயும், ஸ்வஸ்வாமி பாவத்தை மாறுடிக்கொண்டு கண்ணுக்கு விஷயமாம்படி ஸர்வஸுலபனாய்க் கொண்டு, கோயில்களிலும், க்ருஹங்களிலும், தேச காலாவதியின்றிக்கே எழுந்தருளியிருக்கும் நிலை.

## III. புருஷார்த்த ஸ்வரூபம்—புருஷனால் அர்த்திக்கப் படுமது ; புருஷார்த்தம்—அதன் ஸ்வரூபம்

1. தர்மமாவது :

ப்ராணி ரக்ஷணத்துக்கு உறுப்பாகப்பண்ணும் வ்ருத்தி விசேஷங்கள்.

2. அர்த்தமாவது :

வர்ணாச்ரமாநுரூபமாக தந தாந்யங்களை ஸங்க்ரஹித்து, தேவதா விஷயங்களிலும், பைத்ருகமான கர்மங்களிலும், ப்ராணிகள் விஷயமாகவும், உத்க்ருஷ்டமான தேச கால பாத்ரங்களை யறிந்து தர்ம புத்யாவ்யயிக்கை.

3. காமமாவது :

(i) ஐஹ லௌகிகமாயும்<br>
(ii) பாரலௌகிகமாயும் } த்விவிதமாயிருக்கும் ;

(i) இஹலோகத்தில் காமமாவது : பித்ரு மாத்ரு ரத்ந தந தாந்ய வஸ்த்ர அந்ந பாந புத்ர மித்ர களத்ர பசு க்ருஹ க்ஷேத்ர சந்தந குஸும தாம்பூலாதி பதார்த்தங்களில் சப்தாதி விஷயாநுபவத்தால் வந்த ஸுக விசேஷங்கள் ;

(ii) பரலோகத்தில் காமமாவது : இதில் விலக்ஷணமாய், தேஜோரூபமான ஸ்வர்க்காதிலோகங்களிலே சென்று பசி தாஹ சோக மோஹ ஜரா மரணாதிகள் இன்றிக்கே, ஆர்ஜித்த புண்யத்துக்கீடாக அம்ருத பாநம் பண்ணி அப்ஸரஸ்ஸுக்களோடே சப்தாதிவிஷயாநுபவம் பண்ணுகை.

4. ஆத்மாநுபவமாவது :

துக்க நிவ்ருத்திமாத்ரமான கேவல ஆத்மாநுபவ மாத்ரத்தையும் மோக்ஷ மென்று சொல்லுவர்கள்.

5. பகவதநுபவமாவது :

பகவதநுபவ ரூபமான பரம புருஷார்த்த லக்ஷணமோக்ஷமாவது-அது-ப்ராரப்த கர்மசேஷமாய் அவச்யம் அநுபாவ்யமான புண்ய பாபங்கள் நசித்து, அஸ்தி - ஜாயதே - பரிணமதே - விவர்த்ததே - அபக்ஷீயதே - விநச்யதி' என்கிறபடியே ஷட்பாவ விகாராஸ்பதமாய், தாபத்ரயாச்ரயமாய், பகவத் ஸ்வரூபத்தை மறைப்பித்து, விபரீத ஜ்ஞாநத்தை ஜநிப்பிக்கக்கடவதாய், ஸம்ஸார வர்த்தகமான ஸ்தூல சரீரத்தை உபேக்ஷையோடே போகட்டு, ஸுஷும்நா நாடியாலே சிர : கபாலத்தைப் பேதித்துப் புறப்பட்டு, ஸூக்ஷ்ம சரீரத்தோடே 'வானேற வழிபெற்று' 'மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் அன்னதோரில்லியினூடுபோய்' ஸூக்ஷ்ம சரீரத்தையும் வாஸநா ரேணுவையும், விரஜா ஸ்நாநத்தாலே கழித்து, ஸகல தாபங்களும் ஆறும்படி, அமாநவ கர ஸ்பர்சமும் பெற்று சுத்த ஸத்வாத்மகமாய்,

பஞ்சோபநிஷந்மயமாய், ஜ்ஞாநாநந்தஜநகமாய், பகவதநுபவைக பரிகரமாய், "ஒளிகொண்டசோதியுமாய்" இருக்கிற அப்ராக்ருத விக்ரஹத்தைப் பெற்று, 'முடியுடைவானவர் முறைமுறையெதிர் கொள்ள, நிரதிசயாநந்தமயமான 'திருமாமணி மண்டபத்தை ப்ராபித்து, லக்ஷ்மீஸஹிதனாய், பூமி, நீளா நாயகனாய், விலக்ஷண விக்ரஹ யுக்தனாய், "குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே யெழுவதோருருவான" ஸ்ரீவைகுண்டநாதனை நித்யாநுபவம் பண்ணி, நித்யகிங்கர ஸ்வபாவனாகை.

## IV. உபாய ஸ்வரூபம்

### 1. கர்ம யோகமாவது :

யஜ்ஞ, தாந தபோ த்யாந ஸந்த்யாவந்தந பஞ்சமஹாயஜ்ஞ அக்நிஹோத்ர தீர்த்தயாத்ரா புண்யக்ஷேத்ரவாஸ க்ருச்சர சாந்த்ராயண புண்யநதீஸ்நாந வ்ரத சாதுர்மாஸ்ய பலமூலாசந சாஸ்த்ராப்யாஸ ஸமாராதந ஜப தர்ப்பணாதி கர்மாநுஷ்டாநத்தால் வந்த காய சோஷணத்தாலே பாபநாசம் பிறந்து, அத்தாலே இந்த்ரியத்வாரா ப்ரஸரிக்கிற தர்மபூத ஜ்ஞாநத்துக்கு சப்தாதிகள் விஷய மல்லாமை யாலே விஷய ஸாபேக்ஷை பிறந்து, 'யம நியம ஆஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார த்யாந தாரண ஸமாதி ரூபமான அஷ்டாங்க யோக க்ரமத்தாலே யோகாப்யாஸ காலத்தளவும்' ஜ்ஞாநத்துக்கு ஆத்மாவை விஷயமாக்குகை.

(இதுதான் - ஜ்ஞாந யோகத்துக்கு ஸஹகாரியுமாய்
ஐச்வர்யத்துக்கு ப்ரதாந ஸாதநமுமாயிருக்கும்.)

### 2. ஜ்ஞாந யோகமாவது :

இப்படி யோக ஜந்யமான ஜ்ஞாநத்துக்கு ஹ்ருதய கமலம் ஆதித்ய மண்டலம் தொடக்கமான ஸ்தல விசேஷங்களில் எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனை விஷயமாக்கி, அவ்விஷயத்தன்னை சங்க சக்ர கதா தரமாய், பீதாம்பர யுக்தமாய், கிரீடாதி நூபுராந்த திவ்ய பூஷணாலங்க்ருதமாய், லக்ஷ்மீஸஹிதமாகவும் அநுபவித்து, யோகாப்யாஸ க்ரமத்தாலே அநுபவ காலத்தைப் பெருக்கி அநவரத பாவநாரூபமாக்குகை.

(இதுதான் - பக்தி யோகத்துக்கு ஸஹகாரியுமாய், கைவல்ய
மோக்ஷத்துக்கும் ப்ரதாந ஸாதநமுமாய் இருக்கும்)

### 3. பக்தியோகமாவது :

இப்படி தைலதாராவத் அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தாந ரூபமான அநுபவம் ப்ரீதிரூபாபந்நமாகையும், அது தன்னையறியப் பார்த்தால் ப்ராரப்த கர்மங் கழிகையும், ஸாதந ஸாத்யங்களை யநுஸந்தித்து அதினுடைய ஸங்கோச விகாஸமாம்படி பரிணமிப்பிக்கையும்.

4. ப்ரபத்த்யுபாயமாவது :

இப்படி கர்ம ஜ்ஞாந ஸஹக்ருதையான பக்தி யோகத்தில் அசக்தர்க்கும், அப்ராப்தர்க்கும் ஸுகரமுமாய், சீக்ர பல ப்ரதமுமாய், உபாயம் ஸக்ருத்தாகையாலே உபாயாநுஷ்டாந ஸமநந்தர முண்டாகக் கடவதான பகவத் விஷயாநுபவங்களெல்லாம் ப்ராப்ய கோடி கடிதங்களாகையாலே ஸ்வரூபாநுபமாயிருக்கும்.

(இதுதான் - I. ஆர்த்த ரூப ப்ரபத்தியென்றும்,

II. த்ருப்த ரூப ப்ரபத்தியென்றும் இரண்டு படிப் பட்டிருக்கும்)

(i) ஆர்த்த ரூப ப்ரபத்தியாவது : நிர்ஹேதுக பகவத் கடாக்ஷமடியாக சாஸ்த்ராப்யாஸத்தாலும், ஸதாசார்யோபதேசத்தாலும், யதா ஜ்ஞாநம் பிறந்தவாறே, பகவதநுபவத்துக்கு விபரீதமான தேஹ ஸம்பந்தமும், தேசஸம்பந்தமும், தேசிகருடைய ஸஹவாஸமும் துஸ்ஸஹமாய், பகவதநுபவத்துக்கு ஏகாந்தமாம்படி விலக்ஷணமான தேஹத்தையும், தேசத்தையும், தேசிகரையும் ப்ராபிக்கையில் த்வரை 'விஞ்சி,' ஒயுமூப்புப் பிறப்பிறப்புப் பிணி வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்தாயன் ஆகையாலே, 'திருவேங்கடத்தானே புகலொன்றில்லா வடியேன்' 'வேங்கடத்துறைவார்க்கு நம' என்று பூர்ண ப்ரபத்தி பண்ணி 'பல நீ காட்டிப் படுப்பாயோ' 'இன்னங் கெடுப்பாயோ' 'இக்கரையேறியினைத் திருந்தேன்' 'இனியடைய வருளாய்' 'திருவாணை நின்னாணை கண்டாய்' 'இனி நான் போகலொட்டேன்" என்று தடுத்தும், வளைத்தும் பெறுகை.

(ii) த்ருப்த ரூப ப்ரபத்தியாவது : சரீராந்த்ர ப்ராப்தியிலும் ஸ்வர்க்க நரகாநுபவங்களிலும் விரக்தியும், பீதியும் பிறந்து, அதினுடைய நிவ்ருத்திக்கும் பகவத் ப்ராப்திக்கும் உறுப்பாக ஸதாசார்யோபதேச க்ரமத்தாலே உபாய ஸ்வீகாரம் பண்ணி, விபரீத ப்ரவ்ருத்தி நிவ்ருத்தராய், வேத விஹிதமான வர்ணாச்ரமாநுஷ்டாநமும், பகவத் பாகவத கைங்கர்யமும், மாநஸ வாசிக காயிகங்களாலே யதா பல மநுஷ்டித்து,

ஈச்வரன் சேஷியாய், நியந்தாவாய், ஸ்வாமியாய், சரீரியாய், வ்யாபகனாய், தாரகனாய், ரக்ஷகனாய், போக்தாவாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வ சக்தியாய், ஸர்வ ஸம்பூர்ணனாய், அவாப்த ஸமஸ்த காமனாய் இருக்கிற ஆகாரத்தையும்,

நான் அவனுக்குச் சேஷமாய், நியாம்யமாய், ஸ்வம்மாய், சரீரமாய், வ்யாப்யமாய், தார்யமாய், ரக்ஷ்யமாய், போக்யமாய் அஜ்ஞனாய், அசக்தனாய், அபூர்ணனாய், ஸாபேக்ஷனாய் இருக்கிற ஆகாரத்தையும், அநுஸந்தித்துக்கொண்டு 'களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்' என்று உபாயத்தில் ஸர்வ பரங்களையும் அவன் பக்கலிலே போகட்டு நிர்ப்பரனாயிருக்கை.

௫. ஆசார்யாபிமாநமாவது :

இவையொன்றுக்கும் சக்தனன்றிக்கே யிருப்பானொருவனைக் குறித்து, இவனுடைய இழவையும், இவனைப் பெற்றால் ஈச்வரனுக்குண்டான ப்ரீதியையும் அநுஸந்தித்து, ஸ்தநந்தய ப்ரஜைக்கு வ்யாதியுண்டானால் அது தன் குறையாக நினைத்து ஔஷத ஸேவையைப் பண்ணும் மாதாவைப் போலே, இவனுக்காகத் தான் உபாயாநுஷ்டாநம் பண்ணி ரக்ஷிக்கவல்ல பரம தயாளுவான மஹா பாகவதன் அபிமாநத்திலே ஒதுங்கி, 'வல்லபரிசு வருவிப்பரேலது காண்டும்' என்று சொல்லுகிறபடியே ஸகல ப்ரவர்த்தி நிவ்ருத்திகளையும் அவனிட்ட வழக்காக்குகை.

எம்பெருமான் தனித்து நித்ய ஸித்த ப்ராப்யனாகா நிற்கச்செய்தே, ஸகல தேவதாந்தர்யாமியாய்க் கொண்டு ப்ராப்யனாகிறாப் போலே, இவ்வாசார்யாபிமானமும் தனியே உபாயமாகா நிற்கச் செய்தேயும், எல்லா உபாயங்களுக்கும் ஸஹகாரியுமாய் ஸ்வதந்த்ரமுமாய் இருக்கும்.

## V. விரோதி ஸ்வரூபம்

1. ஸ்வரூப விரோதியாவது :

தேஹாத்மாபிமாநமும், அந்ய சேஷத்வமும், ஸ்வஸ்வாதந்த்ரியமும்;

௨. பரத்வ விரோதியாவது :

தேவதாந்தர பரத்வ ப்ரதிபத்தியும், ஸமத்வ ப்ரதிபத்தியும், க்ஷுத்ர தேவதா விஷயத்தில் சக்தியோக ப்ரதிபத்தியும், அவதார விஷயத்தில் மாநுஷ ப்ரதிபத்தியும், அர்ச்சாவதார விஷயத்தில் அசக்தி யோக ப்ரதிபத்தியும்;

3. புருஷார்த்த விரோதியாவது :

புருஷார்த்தாந்தரங்களில் இச்சையும், தானுகந்த பகவத் கைங்கர்யங்களில் இச்சையும்;

4. உபாய விரோதியாவது :

உபாயாந்தர வைலக்ஷண்ய ப்ரதிபத்தியும், உபாய லாகவமும், உபேய கௌரவமும், விரோதி பாஹுள்யமும் ;

6. ப்ராப்தி விரோதியாவது :

ப்ராப்த சரீர ஸம்பந்தமாய், அநுதாப சூந்யமாய், குருவாய், ஸ்திரமாய் இருந்துள்ள பகவதபசார பாகவதாபசாரங்களும், அஸஹ்யாபசாரங்களும் இவை எல்லாவற்றுக்கும் விரோதி யென்று பேராகக் கடவது.

அந்ததோஷம் — ஜ்ஞாந விரோதியாகக் கடவது.

ஸஹவாஸதோஷம் — போக விரோதியாகக் கடவது.

அபிமாநம் — ஸ்வரூப விரோதியாகக் கடவது.

## காலக்ஷேபம் பண்ணும் க்ரமம்

இப்படி அர்த்தபஞ்சக ஜ்ஞாநம் பிறந்து முமுக்ஷுவாய் ஸம்ஸாரத்திலே வர்த்திக்கிற சேதநனுக்கு மோக்ஷ சித்தியளவும், ஸம்ஸாரம் மேலிடாதபடி காலக்ஷேபம் பண்ணும் க்ரமம்.

வர்ணாச்ரமாநுரூபமாகவும், வைஷ்ணவத்வாநுரூபமாகவும் அசநாச்சாதநங்களை ஸம்பாதித்து 'யதந்ந: புருஷோபவதி ததந்நாஸ் தஸ்ய தேவதா:' என்கிறபடியே ஸகல பதார்த்தங்களையும் பகவத் விஷயத்திலே நிவேதித்து, யதாபலம் பாகவத கிஞ்சித்காரமும் பண்ணி, தேஹ தாரணமாத்ரத்தை ப்ரஸாத ப்ரதிபத்தியோடே ஜீவிக்கையும், வருந்தியும் தத்வ ஜ்ஞாநம் பிறப்பித்த ஆசார்யன் ஸந்நிதியிலே கிஞ்சித்காரத்தோடே அவனுக்கபிமதமாக வர்த்திக்கையும், ஈச்வரன் ஸந்நிதியிலே தன்னுடைய நீசத்வத்தை யநுஸந்திக்கையும், ஆசார்யன் ஸந்நிதியில் தன்னுடைய அஜ்ஞதையை யநுஸந்திக்கையும், ஸ்ரீவைஷ்ணவ ஸந்நிதியில் பாரதந்த்ரியத்தை யநுஸந்திக்கையும், ஸம்ஸாரிகள் முன்னிலையில் தன்னுடைய வ்யாவ்ருத்தியை யநுஸந்திக்கையும், ப்ராப்யத்தில் த்வரையும், ப்ராபகத்தில் அத்யவஸாயமும், விரோதியில் பயமும், தேஹத்தில் அருசியும் ஆர்த்தியும், ஸ்வரூபத்தில் உணர்த்தியும், ஸ்வரக்ஷணத்தில் அசக்தியும், உத்தேச்ய விஷயத்தில் கௌரவமும், உபகார விஷயத்தில் க்ருதஜ்ஞதையும், உத்தாரக ப்ரதிபத்தியும், அநுவர்த்திக்கையும் வேணும்.

இப்படி ஜ்ஞாநாநுஷ்டாநங்களோடே கூடி வர்த்திக்குமவன் — ஈச்வரனுக்குப் பிராட்டிமாரிலும் நித்ய முக்தரிலும் அத்யந்தாபிமத விஷயமாகக் கடவன்.

அர்த்த பஞ்சகம் முற்றிற்று.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:



தி. கோ. இராமாநுஜதாஸர்

இவர் திருக்கோவலூர் எம்பெருமானார்ஜீயர் மடத்துத் திருவடி சம்பந்தம் பெற்றவர். சென்னை, சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீநம்பிள்ளை சபையின் தலைவர். சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ ராமாநுஜ நூல்நிலையம் ஸ்தாபித்தவர். சில முக்கியமான ஸ்ரீவைஷ்ணவ வெளியீடுகளை அச்சிட்டு விநியோகம் செய்தவர். இப்பவும் இவரால் இந்நூல் கொணரப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ:

இவர் ஸ்ரீபெரும்பூதூர் பேரருளாள யதிராஜ ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி திருவடி சம்பந்தம் பெற்றவர்.

இவர் ஸ்ரீ வைஷ்ணவம் அபிவிருத்தி செய்வதில் ஊக்கமுள்ளவர். பல திவ்விய தேசங்களில் பல உசிதமான கைங்கர்யங்கள் செய்து வருபவர். இதற்குமுன் நவவித பக்தி, நவவித சம்பந்தம், ஸ்ரீ வைஷ்ணவர் கடமை, ஸ்ரீ வைஷ்ணவ மங்கையர் வாழ்க்கைப்பாட்டு, எம்பெருமானார் ப்ரபாவம், உபதேச ரத்தின மாலை முதலிய பல நூல்கள் பதிப்பிக்கப் பொருள் உதவியவர். இப்பவும் இந்த அரிய நூலைப் பதிப்பிக்கப் பொருள் உதவியவர்.



கு. சித்தானந்த ராமாநுஜதாஸர்

---

புத்தகம் கிடைக்குமிடம் :—

**தி. கோ. இராமாநுஜதாஸர்,**
ப்ளாக் 1, ரூம் 7, 4-வது மெயின்ரோடு, இந்திரா நகர், சென்னை-20
கு. சித்தானந்த ராமாநுஜ தாஸர், ப்ரோக்கர்,
பிள்ளையார் கோவில் தெரு, விழுமங்கலம், பண்ணுருட்டி.

---

வாசு ப்ரஸ், திருவல்லிக்கேணி, சென்னை-5.